Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 4 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 பெப்ரவரி (17 - 02 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 364

## மாந்தையை அவதானிக்கும் ஈ. ஆர். எஸ் - 1 செய்மதி

(பாரிஸ்)

புதிய முறையில் அமைந்த செய்மதி ஒன்று பூமியைச் சுற்றவுள்ளது. பூமிக்கடியில் மூன்று மீற்றர் ஆழம்வரை அடங்கியுள்ளவற்றை இதன்மூலம் அறியலாம். ஈ. ஆர். எஸ் - 1 என்றழைக்கப்படும் இச் செய்மதி நடப்பு ஆண்டு டிசம்பரில் விண்வெளிக்கு அனுப்பப்படும். கடலால் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் (மன்னார்)மாந்தை (4ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க விமானங்களுக்கு எரிபொருள்

# சந்திரசேகரின் அரசிற்கு காங்கிரஸ் எச்சரிக்கை

## உடன்நிறுத்தாவிட்டால் ஆதரவை விலக்குவோம்

(டில்லி)

அமெரிக்க இராணுவ விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு எதிராக ஆக்கபூர்வமான நடவடிக்கை உடன் எடுக்காவிட்டால் இது தொடர்பாகப் பாராளுமன்றில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு தாம் எதிராக வாக்களிக்க முடியாமல் போகலாம் என இந்திரா காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குலாம் நபி அசாத் தெரிவித்தார்.

வளைகுடாவில் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கநாட்டு விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதியை சந்திரசேகர் அரசாங்கம் வழங்கியுள்ளமை தொடர்பாகவே இந்த அச்சுறுத்தல் இந்திரா காங்கிரஸால் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவது தொடர்பாக டில்லியில் சந்திரசேகர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ள இந்திரா காங்கிரஸ் செயலாளர் குலாம் நபி அஸாத் எரிபொருள் நிரப்பும் வசதியை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுள் (4ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாடுகளுக்கு எரிபொருள் நிரப்ப கொழும்பு முடிவு

(கொழும்பு)

வளைகுடாப் போரில் ஈடுபட்டிருக்கும் மூன்று நாடுகளுக்கு அடுத்த வாரத்திலிருந்து எரிபொருள் நிரப்புவது என்று கொழும்பு முடிவெடுத்துள்ளது,

அமெரிக்கா, மற்றும் அதன் அணியைச்சேர்ந்த நாடுகளின் வேண்டுகோளை அடுத்தே அமைச்சரவையின் துணைக்குழு இவ்வாறான ஒரு முடிவை எடுத்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தாண்டிக்குளம் பகுதியில் ரயர்போட்டு எரித்த தடயங்கள்

(யாழ்ப்பாணம்)

தாண்டிக்குளம் பகுதியில் மனித உடல்கள் ரயர்போட்டு எரிக்கப்பட்ட தடயங்கள் காணப்படுவதாக நேற்று அங்கிருந்து வந்த பிரயாணிகள் ஈழநாதத்திற்குத் தெரிவித்துள்ளனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## தனியார்பஸ்வண்டி சம்மேளனம் 2000 பஸ்வண்டிகள் இறக்குமதி

(கொழும்பு)

தனியார் பஸ் வண்டிச் சொந்தக்காரர்களின் சம்மேளனம் 2000 பஸ் வண்டிகளை இந்தியா, யப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய உள்ளது. இந்த பஸ் வண்டிகளில் சில ஏற்கனவே இலங்கை வந்துள்ளன.

30 ஆசனங்களைக் கொண்ட ஒரு பஸ் வண்டியின் (4ஆம் பக்கம் பார்க்க)

## சமகாலப் பயிற்சி

ஆசிரியர்களுக்குச் சமகாலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அடுத்த ஜனவரி முதல் 32,000 ஆசிரியர்களுக்குச் சமகாலப் பயிற்சி வழங்கப்படும். மூன்று வருடங்களுக்கு நடைபெறும் இந்தப் பயிற்சியில் தேறியவர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படும். இந்தத் தகவலைக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வல்லையின் கடந்தமாத அழிவுகள்

வல்வெட்டித்துறையில் கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை சிறிலங்கா வான் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட அழிவுகள் வருமாறு;

| | வீடுகளின் எண்ணிக்கை | கட்டடங்களுக்கான நஷ்டம் | தளபாட நஷ்டம் | இயந்திரங்கள், வெளி இணைப்புகளுக்கான நஷ்டம் | மீன்பிடி படகுகள், வலைகளுக்கான நஷ்டம் | சமையல் அறைப் பாத்திர நஷ்டம் | வருமான இழப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| முழுமையான அழிவு | 362 | 73,822,500 | 11,076,590 | 1,471,300 | 1,389,100 | 1,468,100 | 421,039 |
| அரைகுறை அழிவு | 720 | 31,887,925 | 4,387,850 | 1,177,600 | 1,197,100 | 1,154,300 | 699,838 |
| மொத்த அழிவின்பெறுமதி | 1082 | 105,710,425 | 15,464,440 | 2,648,900 | 2,586,200 | 2,622,400 | 1,120,877 |

மேற்படி தரவுகள் ப. நோ. கூ. சங்க அதிகாரிகள் மற்றும் அப்பகுதிக் கிராமசேவையாளர்களையும் அடக்கிய குழுவினால் திரட்டப்பட்டது. பள்ளிக்கூடங்கள், பொதுக்கட்டட அழிவுகளின் விபரம் இப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை;

## வீர வணக்கம்

### கலா

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முழுநேர ஆதரவாளர் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்ய முயன்றபோது இவர் சயனைட் அருந்தி வீர மரணமடைந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப் பற்று முகாமைச் சேர்ந்த அதிரடிப்படையினர் அக்கரைப்பற்று 7ஆம் குறிச்சியைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் இயக்க முழுநேர உறுப்பினரான கலா என்பவரைக் கைதுசெய்ய முயன்றபோது அவர் சயனைட் அருந்தி வீர மரணமடைந்துள்ளார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

## ஈழநாதம் முதலாம் ஆண்டு நிறைவுப் போட்டி முடிவுகள்

### கருத்துப் படங்கள்

- முதலாம் இடம்:
  இ. ஞானேந்திரன், கோவளம், காரைநகர்.
- இரண்டாம் இடம்:
  ப. நந்தகுமார், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
- மூன்றாம் இடம்:
  பா, குமரன், கே. கே. எஸ். வீதி, இணுவில்.

### சிறுகதை

- முதலாம் இடம்:
  எஸ். கருணாகரன், பிரதான வீதி, இயக்கச்சி.
  ''தூரம் அதிகம் இல்லை''
- இரண்டாம் இடம்:
  ந. குகதாஸன், 'குருபவனம்' கண்டி வீதி, சாவகச்சேரி.
  ''இருளைத்தேடி''
- மூன்றாம் இடம்:
  ஆர் அலெக்ஸ் பரந்தாமன் 'கோகுல வாசம்' பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
  ''நியதியாய்போகும் நிலையில்லாத வாழ்க்கைகள்''

### கவிதைகள்

- முதலாம் இடம்:
  நாமகள் பசுபதிப்பிள்ளை, 154/8, சீ ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
  ''கடைசித் தூது''
- இரண்டாம் இடம்
  எஸ் கருணாகரன், பிரதான வீதி, இயக்கச்சி.
  ''இனி ஒரு நிலை''
- மூன்றாம் இடம்:
  வளவை வளவன். மந்துவில், கொடிகாமம்.
  ''இது என் தேசம் இது என் தாயகம்''

### தகுதி பெற்ற வாசகர் கடிதம்

கந்தையா ராகினி, மக்கள் பிரசுராலயம் லிமிடெட், பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு முதலாம் ஆண்டு நிறைவு தினத்தன்று இடம்பெறும் நிகழ்ச்சியில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. பரிசிற்குரியவர்கள் நேரில்வந்து பரிசில்களைப் பெறுமாறு கோரப்படுகின்றனர். மேலும் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் 'ஈழநாதம்' தனது நன்றியை தெரிவிப்பதோடு, முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் 19-02-1991 அன்று சகலரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றது.

-ஆசிரியர்

## வரிவிளம்பரம்

**போட்டோஸ்ரட்**
போட்டோஸ்ரட் பிரதிகளையும், றோனியோ பிரதிகளையும், தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும், உடனடியாகப் பெற்றுக்கொள்ள "இளிக்கட்" 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (B-1994)

**WANTED**
M B; B; S. Doctor for a Private Hospital in Jaffna. Apply Immediately to the Advertiser, 484/1 Hospital Road, Jaffna (R 1110)

**கல்வி**
G.C E (O L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் விசேஷ சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் No-10, ஸேர்கேந்திரா வீதி, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (R- 1114)

**வகுப்புகள்**
Shorthand & Typing, Book-Keeping & Accounts புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். Contact School of Business Administration 16, 3rd Cross Street Jaffna. (B/ 2018)

**வாங்கப்படும்**
மில்க்வைற் திரவ சவர்க்கார வெற்று அரைப்போத்தல் ரூ: 1-00 விதம் வாங்கப்படும். மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B- 2019)

**விற்பனைக்கு**
சிக்கனமானதும், துரிதமான சலவைக்கும் மில்க்வைற் திரவ சவர்க்காரம். (Liquid Soap) வீட்டில் விளக்கேற்ற வேப்பெண்ணெய் சங்கானை, அச்சுவேலி ப.நோ.கூ. சங்கங்களில் விற்பனையாகிறது - மில்வைற். (B- 2020)

## காணவில்லை

திருமதி இராசம்மா பாலசுப்பிரமணியம்

பா. ஸ்ரீகுகன்

(1) கோப்பாயைச் சேர்ந்த திருமதி இராசம்மா பாலசுப்பிரமணியம் (ஆசிரியை, வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை) சென்ற 10ஆம் திகதி ஞாயிறு காலை 8-30 மணியளவில் நெச்சிமோட்டையில் இருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் பிரயாணம் செய்தவர் இன்றுவரை வீடுவந்து சேரவில்லை. கண்டவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பத்திரிகைக்குத் தெரிவிக்கவும்.

(2) கோப்பாயைச் சேர்ந்த பா. ஸ்ரீகுகன் (வயது 30) சென்ற ஞாயிறு 10ஆம் திகதி வவுனியா சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை கண்டவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பத்திரிகைக்குத் தகவல் தெரிவிக்கவும்

தகவல்:
சி. பாலசுப்பிரமணியம்
(நாவலடி, கோப்பாய்)
(R 1115)

**UNIVERSITY OF JAFFNA, Sri Lanka**

**Services of Translators**

Services of other officers or persons outside the public Service who are competent to do official translations in the following are required by the University of Jaffna:

English to Tamil
English to Sinhala
Sinhala to Tamil

Payment will be made on a peace rate basis Rates applicable for translations are as follows.

Non technical translations – Rs. 15/- per 360 words

Technical translations – Rs. 30/- per 360 words.

Where the number of words in a translation is less than 360, payment may be made on a pro rata basis.

Those who interested are requested to contact the Registrar. University of Jaffna, Thirunelvely. The closing date for the above is 1991-03-15.

REGISTRAR.
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991-02-15
(B-2023)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-03-07 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தாவரவியல் / இரசாயனவியல் / விலங்கியல் / பௌதிகவியல் / கணிதமும் புள்ளிவிவரவியலும் - உதவி விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / சிரேட்ட விரிவுரையாளர் தரம் I;

**சம்பள அளவுத் திட்டம்**

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா; 9,600 - 8 x 250 - 11,600/- மாதமொன்றுக்கு.

2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா: 8,000 - 5 x 250 - 9 250/- மாதமொன்றுக்கு

3. உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரை யொட்டப்பட்ட 23 x 10 சமீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்;

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991. 02. 11
(R-12022)


**20-06-1990 இருந்து 31-12-1990 வரை காலப்பகுதியில்**

# இராணுவத்தால் அழிக்கப்பட்ட வன்னிப்பகுதி நிறுவனங்கள்

**தபாலகங்கள்**

1. கிளிநொச்சி மத்திய தபாலகம் விமானக்குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டு பின் எஸ் எல். ஏயால் எரித்து நாசமாக்கப்பட்டது.

2. முல்லைத்தீவு மத்திய தபாலகம் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல், விமானத் தாக்கல் என்பவற்றால் சேதமடைந்துள்ளது. பின் எஸ். எல்.ஏயால் தளபாடங்கள் எரிப்பு. மிகுதிப்பொருள்கள் கொள்ளையடிப்பு.

3. மாங்குளம் தபாலகம் விமானக்குண்டு வீச்சால் முற்றாக சேதமாக்கப்பட்டது பின்னர் எஸ் எல் ஏயால் தளபாடங்கள், முத்தா வேஜர்கள் எரிப்பு.

**ப, நோ. கூ, சங்கங்கள்**

1 புளியங்குளம் களஞ்சியம் விமானக் குண்டு வீச்சால் சேதம், அங்கிருந்த பொருள்கள் நாசமாக்கப்பட்டன.

2. செட்டிகுளம் கூட்டுறவுக் கடை விமானக்குண்டுவீச்சால் சேதமாக்கப்பட்டு பின்னர் எஸ்.எல்.ஏயால் பொருள்கள் எரித்து நாசம்செய்யப்பட்டன

3. இரணை இலுப்பைக் குளம் சங்கக்கடை விமானக் குண்டு வீச்சால் பாரியசேதம்.

4. முல்லைத்தீவு ப. நோ. கூ. தலைமைச் செயலகம் விமானத்தாக்குதலால் பலத்த சேதம்.

5. முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய களஞ்சியம் மாங்குளத்தில் இருந்தது. எஸ்.எல். ஏயால் அங்கிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டு பின் விமானக்குண்டுவீச்சால் சேதமடைந்துள்ளது.

6. முள்ளியவளை சங்கக் கடை விமானக்குண்டுவீச்சால் பலத்த சேதமடைந்துள்ளது.

7. முள்ளிவாய்க்கால் சங்கக் கடை விமானக்குண்டுவீச்சால் சேதமடைந்துள்ளது.

8. செட்டிகுளம் ப. நோ. கூ. சங்க தலைமைச்செயலகம் இடித்து நொருக்கித் தரைமட்டமாக்கப்பட்டது. முகாம் விஸ்தரிப்புக்காக இது தரைமட்டமாக்கப்பட்டது. அங்கிருந்த பொருள்களை எஸ்.எல்.ஏ கொள்ளையடித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

**வைத்தியசாலைகள்**

1. முல்லைத்தீவு ஆதார வைத்திசாலை மீது விமானக் குண்டு வீச்சு; பீதியினால் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிகள் வெளியேற்றம். பின்பு எஸ் எல்.ஏ. அங்கிருந்த மருந்துப்பொருள்கள் தளபாடங்கள் என்பன கொள்ளையடிப்பு. பின்பு விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பலத்த சேதம்; தற்போது செயல்படவில்லை.

2. மாங்குளம் ஆதார வைத்தியசாலை விமானக் குண்டு வீச்சால் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

3. மல்லாவி வைத்தியசாலை அடிக்கடி விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்றது தற்போது சிறு அளவில் இயங்குகின்றது.

4. கிளிநொச்சி வைத்தியசாலை விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி, தற்போது இயங்குகின்றது.

5. இரணை இலுப்பைக் குளம் வைத்தியசாலை விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி தற்போது மருந்து இல்லாமல் செயற்படவில்லை,

**சமநலச் சேவை நிலையங்கள்**

1. இரணை இலுப்பைக் குளம் க. ந சே நிலையம் விமானக் குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டது பொருள்கள் நாசமாக்கப்பட்டன.

2. ஒட்டுசுட்டான் க. ந. சே. நிலையம் விமானக் குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டது. பொருள்களும் நாசமாக்கப்பட்டன.

3 கிளிநொச்சி விவசாய விஸ்தரிப்பு நிலையம் விமானக்குண்டு வீச்சால் பாரிய சேதம் அடைந்த பின்பு இராணுவத்தால் எரித்து நாசமாக்கப்பட்டன.

4 கிளிநொச்சி விதை ஆராய்ச்சி நிலையம் விமானக்குண்டு வீச்சால் பாரிய சேதமடைந்து பின்பு இராணுவத்தினரால் எரித்து நாசமாக்கப்பட்டது.

5. முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய தலைமைச் செயலகம் விமானக் குண்டுவீச்

(3ஆம் பக்கம் பார்க்க)


## முக்கிய அறிவித்தல்

01-01-1991 முதல் எமது ஆர் வீ. ஜி. பீடிகள் வழமைபோல பலவர்ண லேபலில் விற்பனை செய்யப்படுகின்றன. எமது அசல் ஆர். வீ- ஜி. பீடிகள் வெள்ளை லேபல்களில் விற்பனையாவதில்லை என்பதை ஆர். வீ. ஜி. விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

(B. 2003) — ஆர். வீ. ஜி. நிர்வாகம்





**பெப்ரவரி 17**

1987ஆம் ஆண்டு காஞ்சிரங்குடாவில் வீரமரணமடைந்த

**சுதர்சன்** (ஐ. கருணாகரன் - அக்கரைப்பற்று)

இதே ஆண்டு பரிசோதனை முயற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

**சுமன்** (ஜெயக்குமார் - காரைதீவு)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**நசீர்** (சம்சுதீன் நசீர் - ஒலுவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இந்நாளில் நாங்கள்
உங்களைப் பிரிந்தோம்.

இந்த மண்ணின் வேதனை
துடைக்க, துயர்களை ஏற்றீர்

வெந்து மடியினும் விடுதலை
வேட்கையை விதைத்த வீரரே!

அந்த நாட்களை நினைவில்
தாங்கி - உங்கள் பாதையில்......

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B- 2021)

## ❋ சிந்தனைக்கு ❋

அகந்தை முன்னே செல்லும்; அவமானம் பின் தொடரும்;

— சாலமன் மன்னன் (விவிலியம்)


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17 02 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2258
ஏ.பெ. எண் 03


## அக்கறையற்றதன் விளைவே முன்நிபந்தனை

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் ஆயுதங்களைக் கைவிட்டு ஏனைய இயக்கங்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இந்த முன் நிபந்தனைகள் அரசாங்கம் தமிழர் தேசிய பிரச்சினைக்கு அமைதியான முறையில் அரசியல் தீர்வுகாண எள்ளளவும் நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. அதாவது சிறிலங்கா ஜனாதிபதியின் இப்பேச்சில் ''பேச்சுவார்த்தை நடத்த புலிகள் விரும்பினால்'' என்பதில் இருந்து அரசிற்கு பேச்சுவார்த்தையில் எந்தவித அக்கறையும் இல்லை. விடுதலைப்புலிகள் தேவையானால் பேச்சுவார்த்தை நடத்த வரட்டும் என்ற தொனியே தென்படுகின்றது.

ஆனால் கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது ஆயுதத்தை கைவிட வேண்டும் என்றோ அன்றி, ஏனைய குழுக்களுடன் சேர்ந்தோ சேர்ந்து வரவேண்டும் என நிபந்தனை விதிக்கவில்லை. தமிழர் எனவும், புலிகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த சிறிலங்கா எண்ணியது. ஆனால் புலிகள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த நிலையில் போர்மூண்டது.

ஆறுமாதப் போரின் பின்னர் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு பேச்சுவார்த்தைகளுக்கும் முன் நிபந்தனைகளையும் விதித்துள்ளது. இவை பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவனவாயில்லை.

கடந்தமாதமே விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பின் போதும் சரி, அதற்கு முன்னரும் சரி விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு விதிக்கப்படும் முன் நிபந்தனைகளை எப்பொழுதும் ஏற்றுக் கொண்டதில்லை. அவ்வாறான நிபந்தனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு சிறிலங்காவுடனோ, இந்தியாவுடனோ புலிகள் ஒரு போதும் சென்றதில்லை. இந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளை விதிப்பது என்பது பேச்சுவார்த்தையைத் தட்டிக்கழித்து இராணுவத் தீர்வை சிறிலங்கா அரசாங்கம் நாடி நிற்பதையே காட்டுகின்றது.

மேலும் முன் நிபந்தனைகளில் ஒன்றான ஆயுதங்களைக் கைவிடுதல் என்பதும் விடுதலைப்புலிகளினால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிபந்தனையாக இருக்கப் போவதில்லை. விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் இன்று பாதுகாத்து நிற்பது இந்த ஆயுதங்களேயாகும். விடுதலைப்புலிகளும் கடந்தகாலம் முழுவதும் ஆயுதங்கள் ஒப்படைப்பு, கையளிப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். அத்தோடு விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஏன் தூக்கினார்கள் என்பதற்கான பிரச்சினைக்குத் தீர்வைக் காணாமல் ஆயுதங்களைக் கைவிடுதல் என சிறிலங்கா ஜனாதிபதி கோருவது தமிழ் மக்களை தங்களிடம் சரணடையுமாறு கேட்டதற்கு ஒப்பானதாகும். இதனை தமிழ் மக்களும், புலிகளும் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை; ஏற்கவும் கூடாது.

அடுத்த நிபந்தனையானது கொழும்பில் தங்கியுள்ள ஏனைய தமிழ் குழுக்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு சிறிலங்கா ஜனாதிபதி அழைப்பதாகும். இதுவும் பேச்சுவார்த்தைக்கு சிறிலங்கா அரசாங்கம் போடும் பாரிய முட்டுக்கட்டையாகும்.

ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்து ஏன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டும்? தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு தமிழரின் தாயக மண்ணில் பற்றுக் கொண்டவர்களுக்கும், மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களுக்குமட்டுமே உரிமை உண்டு. மண்ணில் இல்லாதவர்களுக்கு அதுபற்றிப் பேச உரிமையில்லை.

அந்நிய சக்திகளின் கைக் கூலிகளாகவும் தமிழர் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுபவர்களாகவும், அந்நியர்களுடன் சேர்ந்து தமிழர் பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும் அழித்தவர்களுடனும் கூட்டுச்சேர்ந்து எவ்வாறு தமிழர் உரிமைகளைப் பற்றிப் பேச முடியும். அதிலும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் புலிகளுடனேயே பேச வேண்டும் என தொண்டமான் போன்ற அமைச்சரவையின் அங்கத்தவர்களே தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை சம்பந்தமான பேச்சு அவர் எவ்விதத்திலும் பேச்சுவார்த்தை மூலம் தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண தயாராயில்லை என்பதையே காட்டுகின்றது. இன்றைய சிறிலங்கா ஜனாதிபதியின் நிலைப்பாடு மட்டுமல்ல கடந்த கால சிறிலங்கா ஆட்சித்தலைவர்களின் சமாதானம், அமைதி, ஜனநாயகம் என்பனவும் இவ்வாறானதே.

## மையம் தவறிய வட்டம்

*செங்கை ஆழியானின்' ஒரு மைய வட்டங்கள்' என்னும் நாவல் பற்றிய ஒரு பார்வை.*

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானின் ''ஒரு மைய வட்டங்கள்'' என்ற நாவல் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. பொன் விழாக்காணும் இந்த ஜன ரஞ்சக எழுத்தாளரின் இந்த நாவலின் அட்டையில் நாவலின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் செங்கை ஆழியான் எனப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் அவரது எழுத்துக்கள் எவ்வளவு தூரம் சென்றடைந்திருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டும் அம்சமாகும்.

பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு இவற்றின் மத்தியில் ''கண்டிப்பாக வெளிவந்தே தீரவேண்டும் என்ற அக்கறையுடன்'' வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் தேசிய இனப்பிரச்சினையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. ஒரு நாவல் என்ற வகையில் பார்த்தால் கையில் எடுத்ததும் ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடிய வகையில் சீராக, விறுவிறுப்பான நடையில் போய்க்கொண்டிருக்கின்றது: இது அவருக்கே உரிய தனித்துவம்; மருதங்குழி என்ற கிராமத்தையே இக் கதையின் களமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் ஆசிரியர். அந்தக் கிராமத்துக்கே எம்மை அழைத்துச் செல்லும் வகையில் ஒவ்வொன்றையும் அழகாகச் சித்திரித்திருந்தார். ''எருமைகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மரமணி கடகடவென ஒலியெழுப்பியது'' (பக் - 8) என்றவரிகள் எமது காதுக்குள்ளும் அந்த ஒலி கேட்பது போன்ற உணர்வை ஊட்டுகின்றது. அதேபோல் சோமாவைப்பற்றிக் குறிப்பிடும் போது ''ஊரின் அழகெல்லாம் அவளிடம்'' (பக் – 59) இவருக்கே உரியபாணி.

முப்பத்தாறாம் அத்தியாயத்தில் இருந்து கடைசி அத்தியாயமான நாற்பதாம் அத்தியாயம் வரை காட்டுக்குள் குழிக்குள் விழுந்த சிறிசேனா (வில்லன்) வின் நிலைபற்றியதாக இருக்கிறது. அவ்வளவும் விறுவிறுப்பு ''ஒரு மனிதன் பிணமாகிக் கொண்டிருப்பதைக் கண்ட வைரிவானத்தில் திளம்பிய து: நேரம் இருக்கிறது'' (பக்-92) அவனது அருகில் விழுந்த முயலைப்பற்றிக் குறிப்பிடும் போது ''துடி துடித்து அது செத்துக் கொண்டிருந்தது. வித்தியாசமில்லை'' (பக்-93) அவனது தந்தை ஐயரத்தினவின் குரலைக்கேட்டபோது ''நான் செத்துவிட்டதற்காக அழுகிறாரா'' (பக்-94) இந்த வரிகளெல்லாம் அந்தக்காட்சியைச் சித்தரிப்பதில் அவர் எவ்வளவு வெற்றியைப் பெற்றுள்ளார். என்பதற்கான சிறு உதாரணங்கள்;

இந்த நாவல் 1982 ஆம் ஆண்டில் முதற்பதிப்பு வெளியிடப்பட்டது. அந்தக் காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் பெரியளவில் முனைப்படையவில்லை. ஆகவே இந்தக்கதை வலியுறுத்திய கருத்துக்கள் பற்றி அந்தக் காலத்தில் யாரும் கவலைப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் மறுபிரசுரமாக இக் காலகட்டத்தில், இந்த நெருக்கடியானநேரத்தில் இது வெளிவருவதால் பல சந்தேகங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில் இக்கதையின் ஊடாக இலங்கையின் ''இன ஐக்கியம்'' வலியுறுத்தப்படுகிறது, சோமா - செல்லத்துரை திருமணம்பற்றி ஐயரத்தின குறிப்பிடும்போது ''இலங்கை முழுக்க இப்படிப்பட்ட கலியாணங்கள் நடக்க வேண்டும். இனப்பகை அழிய இது ஓரளவு உதவும் (பக்கம் 59) என்ற வரிகள் முன்னாள் அமைச்சர் குமாரசூரியர் இனப்பிரச்சினைக்கு கலப்புத் திருமணமே வழி என்று கூறியதை நினைவூட்டுகிறது, அதுபோலவே ''தமிழும் சிங்களமும் தான். நான் பெண். நீங்கள் ஆண் அவ்வளவு போதும்'' என்ற சோமாவின் இலட்சியமான கூற்றும் (பக் 62) தமிழ் மக்களைக் காப்பாற்ற ஐயரத்னா எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை விபரிப்பதிலும் இலங்கையின் இன ஐக்கியத்தை நிலை நிறுத்த இந்த நூல் படாதபாடுபடுகிறது. போராட்ட உணர்வுகளை வளர்க்க வேண்டிய நூல்கள் வெளிவர வேண்டிய இக்கால கட்டத்தில் இவ்வளவு அக்கறையுடன் இந்தநூல் மறு பிரசுரமாக ஏன் வெளிவர வேண்டும்?

அத்துடன் குறிப்பிட்ட அந்தத் தமிழ்க் கிராமம் சிங்களவருக்கும் சொந்தமான கிராமமென இ நூல் ஒப்புக்கொள்கிறது

இனப்பிரச்சினையின் தலையாய அம்சமான குடியேற்றம் பற்றி இந்நூல் நசிந்து கொண்டு போகும் தன்மையைத் தான் ஊட்டுகின்றது. சிங்களவர்கள் தாக்குதல் நடத்தினாலும் ஐக்கியத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதைப் போதிக்கின்றது. படாதபாடுபட்டாவது கொழும்புக்குப் போக வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்கள் வேண்டுமென்றால் இந்த நூலை வரவேற்கலாம். போராட்டத்துக்கான அடிப்படைக் காரணங்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட இந் நூலை இந்த மண்ணை நேசிக்கும் எவராலும் ஏற்றுக் கொள்வது சிரமமே.

குடியேற்றங்களையும், இனப்பிரச்சினையையும் மையமாக வைத்து இந்நாவல் வெளிவந்திருப்பதால் தமிழர் தாயகத்தைப் பாதுகாக்க ஏதாவது சிறு ஆலோசனை தானும் முன் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையில் இந்நூல் எமக்கு ஏமாற்றத்தையே கொடுக்கின்றது.

இந்நூல் ஆசிரியரது அண்ணருக்கும், அவரது மச்சாளுக்கும் காணிக்கையாக்கப் பட்டுள்ளது. அதில் ''இந்த மண்ணில் கால் பதித்ததன் நோக்கத்தை மறந்து இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கிகளை உயர்த்த நேர்ந்த போது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஒரு தவறான கணிப்பீடாகும். அவர்களது கால் ஆக்கிரமிப்பின் நோக்கத்துடனேயே இங்கு பதிக்கப்பட்டது. இங்கு நடந்த சம்பவங்கள் விபத்தல்ல.

செங்கை ஆழியானின் பேனாவை மக்கள் நேசிக்கிறார்கள். அதற்கென தனியான வாசகர் வட்டம் உண்டு. அந்த வாசகர்களுக்கு உண்மையான கருத்துக்களை முன்வைக்க வேண்டிய கடமை அவருக்கு உண்டு. எனவே இவரது பேனா இந்த மண்ணையும், மக்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்வது பொருத்தமானதாகும்.

**மாறன்**

### இராணுவத்தால்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சால் சேதம் அடைந்தது. பின்பு அங்கிருந்த பொருள்கள் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டு எங்கு கொண்டு செல்லப்பட்டது என்பது தெரியவில்லை.

**புகையிரத நிலையங்கள்**

1. மாங்குளம் புகையிரத நிலையம் விமானக்குண்டு வீச்சால் சேதமடைந்துள்ளது:

2. கிளிநொச்சி புகையிரத நிலையம் ஷெல், ஹெலி, விமானம் போன்றவற்றால் தாக்கப்பட்டுள்ளது.

3 வவுனியா புகையிரத நிலையம் 20 - 06 - 90 அன்று இராணுவத்தினரால் பொருள்கள் கொள்ளையடிக்கப் பட்டது:

**பொதுச்சந்தைகள்**

1 கிளிநொச்சி பெரிய சந்தை விமானத் தாக்குதலுக்கு இலக்காகிய பின்னர் இராணுவத்தினரால் எரித்து நாசமாக்கப் பட்டது:

2. பரந்தன் சிறிய சந்தை இராணுவத்தினரால் எரிப்பு.

3. முல்லைத்தீவு பட்டினசபைச்சந்தை விமானத்தாக்குதல், கடலில் இருந்துபீரங்கித் தாக்குதல், பின்பு அங்கிருந்த பொருள்களை இராணுவத்தினர் கொள்ளையடித்தனர்;

4. மாங்குளம் சந்தை விமானத் தாக்குதலால் பாரிய சேதமடைந்துள்ளன;

**தொண்டர் ஸ்தாபனங்கள்**

1. கரைச்சிக் குடியிருப்பில் இருக்கும் றெட்பானா தலைமைச் செயலகம், களஞ்சியம் என்பவற்றிற்கு விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு முற்றாக சேதமடைந்துள்ளது;

2. வண்ணாங்குளத்தில் இருக்கும் சர்வோதயம் விமானத் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்துள்ளது

3 புதுக்குடியிருப்பில் இருக்கும் ஐ சி ஆர் சி க்கு விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு சேதமடைந்துள்ளது;

### கருத்தரங்கு

''வடமாகாணத்தில் நீர் வழங்கலுக்கான அபிவிருத்தி திட்டங்கள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று போராசிரியர் வி. நவரட்ணராஜா தலைமையில் 2. 3. 91 அன்று சனிக்கிழமை கிளிநொச்சி விவசாயபீடத்தில் நடைபெறவுள்ளது.

### விசேட கருத்தரங்கு

யாழ் கல்விமாவட்டத்தின் ஆண்டு ஒன்பது வகுப்புக்களையுடைய பாடசாலை அதிபர்களுக்கும் தொழில்நுட்ப, வர்த்தகபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்குரிய பாடநெறிகளில் விசேட கருத்தரங்குகளை கல்வித்திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.

கருத்தரங்குகள் நடைபெறும் நிலையங்களும், திகதிகளும் பின்வருமாறு:

இம்மாதம் 22 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், 26 ஆம் திகதி யாழ். இராமநாதன் கல்லூரியிலும், 27 ஆம் திகதி யாழ். நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும், அடுத்தமாதம் முதலாம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், ஆறாம் திகதி வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம. ம. வித்தியாலயத்திலும், 4ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் தினமும் காலை 9.00 மணிமுதல் 2.00 மணிவரை நடைபெறும். மேலும் பாடநெறித் தெரிவுப்பட்டியலை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் அவற்றையும் எடுத்துவரும்படி வேண்டப்படுகின்றனர். (க)

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்

# தீவிரவாதிகள் நடவடிக்கையை அடியோடு களைய வேண்டும்

(சென்னை)

தமிழக மக்களின் பாதுகாப்புக் கருதித் தமிழகத்தில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அடியோடு களைய வேண்டும் என்று மாநில ஆளுநர் வீஷ்மன் நராயணன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் பேசிய அவர், இந்தத் தீவிரவாதிகளுக்கு எதிராக அண்மையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனவும் கூறினார். ஆனால் சட்டவிரோதச் செயலில் ஈடுபடும் விடுதலைப் புலிகளை முளையிலேயே கிள்ள வேண்டும் என்றார். அதே சமயம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தக்க முறையில் பேணப்படுவார்கள் என்று உறுதி கூறினார்.

- வீஷ்மன்

## பதவி விலக முதல்வர் மறுப்பு

(டெல்லி)

கோவா சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து சபாநாயகரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட முதலமைச்சர் ரவிராய் பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலன்கானின் உத்தரவுப்படி நாளை திங்கட்கிழமையன்று சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கை நாடப் போவதாக முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## திருடரால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் மரணம்

(நல்லூர்)

திருடரினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசரச் சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்த கன்னாதிட்டியைச் சேர்ந்த சந்திரன் என்பவர் நேற்று அங்கு மரணமானார். இவரது மனைவியின் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாகவுள்ளது.

## விசேட ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுதேச வளங்களைப் பாவித்து நவீன தொழில் நுட்ப மற்றும் பொறியியல் மூலம் புதிய விவசாய, போக்குவரத்து சாதனங்களை உருவாக்கல் தொடர்பான விசேட ஆலோசனைக்கூட்டம் ஒன்றை இன்று காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. பொறியியல், தொழில்நுட்ப வல்லுனர்களும் ஆர்வம் உள்ளவர்களும் கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

## விவசாயக் காப்புறுதி மரணியக் கொடுப்பனவுகள்

விவசாயக் காப்புறுதித்திட்டத்தின் கீழ் மரணமடையும் விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின்கீழ் தம்மை இணைத்துக்கொண்ட விவசாயிகளுக்கான மரணப் பணக்கொடை எதிர்வரும் புதன்கிழமை நல்லூர் கமத் தொழில்காப்புறுதிச்சபையின் மாவட்ட அலுவலகத்தில் வைத்து மரணமடைந்த விவசாயிகளின் உரித்தாளரிடம் வழங்கப்படவுள்ளதாகக் கமத் தொழில் காப்புறுதிச் சபை உதவிப்பணிப்பாளர் செ. சிங்கராஜா அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் இம்முறை எம். விஜயரட்ணம், எஸ். தம்பிமுத்து, ரி. பத்மநாதன், பி பரராஜசேகரம் ஆகியோர் நன்மையடையவுள்ளனர்.

## வடபகுதி விமானத்தாக்குதல்; இந்தியா கவலையாம்

(டெல்கி)

இலங்கையின் வடபகுதிகளில் தொடர்ந்து நடாத்தப்படும் வான் தாக்குதலில் பொதுமக்கள் பலரும் கொலலப்பட்டு, சொத்துக்கள் நாசப்படுத்தப்படுவதாகச்சொல்லப்படுவது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று நேற்றுப் புதுடில்லியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சண்டை வலுப்பதால் இலங்கையில் இருந்து அகதிகள் இந்தியாவுக்கு வருவது அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் அனுசரணையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காக்கைதீவு, வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் சிரமதானப்பணிகளில் ஈடுபடவுள்ளனர். (20)

## மாந்தையை அவதானி

துறைமுக நகரத்தைப் பற்றியும் இச்செய்மதியைக் கொண்டு அறிந்துகொள்ளலாம் என்று பிரான்ஸ் நாட்டு விஞ்ஞான ஆய்வுத் தேசிய நிலையத்தின் இயக்குனர் பீரி ஜென்ரெல்தெரிவித்துள்ளார்.

மைக்ரோக்கதிர்கள், றாடர் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும் இச் செய்மதியின் உதவியால் புயற்காற்று, வானிலை, பாலைவனப்புயல் ஆகியவற்றை முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்.

## உச்சவரம்பை கூட்டக் கோரிக்கை

(நல்லூர்)

தற்பொழுது அமுலிலிருக்கும் இலவச நிவாரணத்துக்கான மாதாந்தத் தொகையான 1499ரூபாவை மாதாந்த உச்சவரம்பாக ரூபா 3500/- ஆகக் கூட்டவேண்டும் என்று கோரி நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு யாழ். அரசாங்க அதிபரூடாக மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ். திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

## தாண்டிக் குளம்

சில இடங்களில் அரைகுறையாக எரியாத நிலையில் மனித எலும்புகள் அங்கு காணப்பட்டதாகவும், தாண்டிக்குளம் பகுதிகளில் உள்ள கடைகள், வீடுகள் முற்றாக எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (85)

## 31-ஆம் நாள் வளைகுடாப் போர்

## வெளியேறப் போவதில்லை

(பாக்தாத்)

ஈராக்கினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட யுத்த நிறுத்தம் சம்பந்தமான பிரேரணைகள் பூர்த்திசெய்யப்படாவிட்டால் குவைத்தில் இருந்து வெளியேறப்போவதில்லை என்று ஈராக் நேற்று அறிவித்துள்ளது.

யப்பானுக்கான ஈராக் தூதுவர் நஜீத் அல்றிபாய் டோக்கியோவில் நேற்றுக்காலை இந்தத்தகவலை தெரிவித்துள்ளார்.

வளைகுடாப் பிராந்தியத்தில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே அறிவித்தல் விடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் ஈராக்கின் நிபந்தனைகளை மனப்பூர்வமாக ஆராயவேண்டும் எனவும் அவர்மேலும் கேட்டுக் கொண்டார்.

## போரை முடிவிற்குக்கொண்டுவர ஐ.நாவில் இந்தியா வற்புறுத்து

(வாஷிங்டன்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் இரகசியக்கூட்டம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது. இதேவேளை வளைகுடாப்போரை ஓய்விற்குக் கொண்டுவர இராஜதந்திர முயற்சிகள் தொடர்கின்றன.

பாரசீக வளைகுடாவில் உடன்போர்ஓய்வைக்கொண்டு வரும்படி இந்தியாவலியுறுத்தியுள்ளது. போர் ஓய்வு முயற்சிகளுக்கு ஒரு வாய்ப்பு அளிக்குமாறு பாதுகாப்புச் சபை உறுப்பினர்களை வலியுறுத்திய பாரதம், குவைத்தில் இருந்து படைவிலகலை மேற்கொள்ளப் போவதாக ஈராக் நிபந்தனைகளுடன் அறிவித்திருப்பதைஒருதொடக்க அம்சமாகக் கருதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என ஐ. நாவுக்கான இந்தியத் தூதுவர் கூறியுள்ளார்.

இப்போதைய நிலையில் ஐ. நா. தலைமைச் செயலர் இருமடங்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மற்றொரு பாதுகாப்புச் சபை உறுப்பினரான கியூபா ஈராக் மீது வான் தாக்குதல் மேற்கொள்வது நிறுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளது.

## தூதுவர்கள்வெளியேறஉத்தரவு

ஈரான், எமன், ஜோர்தான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் வெளியேற வேண்டும் என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

வளைகுடாப் போரில் எமன், ஜோர்தான் ஆகிய நாடுகள் ஈராக்கிற்கு சாதகமாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## சதாம் பதவி விலகவேண்டும்

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் ஈராக்கிய ஜனாதிபதி பதவியில் இருந்து சதாம் ஹுசைன் அகற்றப்பட வேண்டும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதேவேளை ஈராக்கின் பிரேரணைகளை அமெரிக்கச் சட்ட நிபுணர்களும் நிராகரித்துள்ளார்கள். இஸ்ரேல் வசமுள்ள பகுதிகளில் இருந்து அந்த நாடு வெளியேறவேண்டும் என்பதும் ஈராக்கில் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் என்று அமெரிக்க செனட்டர் றொபேட்றோல் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமரும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளார்.

## கொழும்புப் பயணிகள் யாழ். வர அனுமதி

சிறிலங்கா இராணுவத்தினரால் வவுனியாவில் எட்டுநாட்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த கொழும்புப் பயணிகள் நேற்றையதினம் யாழ். வந்து சேர்ந்துள்ளார்கள்.

கடும்சோதனையின் பின்பே இவர்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்கள் கொண்டுவந்த கற்பூரம், சவர்க்காரம், பற்றறி போன்ற பொருள்கள் இராணுவத்தினரால்பறிமுதல் செய்யப்பட்டன. (85)

## சந்திரசேகரின்

னர். இதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை உடன் எடுக்கப்படாவிட்டால், இந்த எரிபொருள் நிரப்பும் விடயம் தொடர்பாக எதிர்க் கட்சிகள் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது தாம் எதிர்த்து வாக்களித்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியாமல் போகலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும் மண்டலச் சார்பற்ற கொள்கையின் அடிப்படையிலேயே இந்திரா காங்கிரஸ் இவ் விடயத்தில் தீவிரமாக இருப்பதாக அஸாத் தெரிவித்தார்.

அதேவேளை நேப்பாள தலைநகர் காட்மண்டுவில் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவது புதிய விடயமல்ல என்றும், இவ்வாறு இருபது நாடுகளுக்கு இந்தியா இவ் வசதிகளை அளித்துள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

## தனியார்

விலை ரூபா 7 இலட்சத்துப் பத்தாயிரமாகும். 42 ஆசனங்களைக் கொண்ட பஸ்வண்டியின்விலை 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவாகும்.

## காளை தாக்கி வயோதிபர் மரணம்

(செ. த. மை)

மானிப்பாய் சோதிவேம்படியைச்சேர்ந்த காசிப்பிள்ளை சுந்தரம் (வயது 67) என்பவர் காளைமாடு தாக்கியதால் மரணமானார்.

கடந்த 11 ஆம்திகதி வயலில் வேலை செய்துகொண்டிருந்த இந்த வயோதிபரை இப்பகுதியைச் சேர்ந்த பொ. சின்னையா என்பவர்சினைப்படுத்துவதற்காக வளர்த்து வந்த காளை முட்டி மோதியதால் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் மரணமானார்.

## கத்தி வெட்டு

கள்ளுத்தவறணையில் ஏற்பட்ட கை கலப்புச் சம்பவம் சூடு பிடித்து கத்தி வெட்டு வரை வளர்ந்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் பொ. தெய்வேந்திரராஜா (வயது 25) என்பவர் கையில் பலத்த காயத்துடன் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (85, க)

## ஓலைப்பெட்டியில் வெண்கட்டிகள்

(செ த மை)

சங்கானைசிவப்பிரகாச மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவினரால், வெண்கட்டி தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுண்ணாம்பும்பரிசுச்சாந்தும் சேர்த்துத் தயாரிக்கப்படும் இந்த வெண்கட்டிகள் ஓலைப் பெட்டிகளில் பாதுகாப்பாக 100 எண்ணிக்கையில் வைத்து விற்கப்படும்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை

வேலணை மேற்கு வேலுப்பிள்ளை செல்லத்துரை (இளையதம்பி) அவர்கள் கடந்த 05-02-91 செவ்வாய்க்கிழமை மன்னாரில் காலமாகி விட்டார். அவர்களின் ஈமக்கிரியை அதேதினம் மன்னாரில் நடைபெற்றது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மிகுந்த மனத்தாங்கலுடன் அறியத்தருகின்றேன்.

தகவல்:
செல்லத்துரை பாலச்சந்திரன்
(புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வேலணை மேற்கு,
வேலணை - 8
(16 - 02 - 91)

192, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(B/2026,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.